StudentBounty.com

Register Number | | | | | | |

Part III

# அரசியல் அறிவியல் / POLITICAL SCIENCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதவும் : 20 × 1 = 20

1. சமூகத்திலிருந்து அரசைப் பிரித்தறியத் தவறியதால் அத்தீனிய சுதந்திரம் அடையாளம் காண முடியாத உடைபட்ட சின்னமாகி விட்டது என்று கூறியவர் யார் ?

அ) மாக்ஐவர் ஆ) ரூஸோ

இ) பிளாட்டோ ஈ) பைனர்.

2. கிரேக்க நகர அரசுகளில் எத்தகைய ஆட்சி நடைபெற்றது ?

அ) மன்னராட்சி ஆ) சிறுகுழு ஆட்சி

இ) உயர் குடியாட்சி ஈ) நேரடி மக்களாட்சி.

3. சமுதாய ஒப்பந்தக் கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர்

அ) ஜெனக்ஸ் ஆ) மார்கன்

இ) ரூஸோ ஈ) சர் ஹென்றி மெயின்

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

4. இயற்கை நிலையை படம் பிடித்து காட்டிய கொள்கை

அ) தெய்வீக கொள்கை ஆ) வலிமை கொள்கை

இ) தாய்வழிக் கொள்கை ஈ) சமுதாய ஒப்பந்தக் கொள்கை.

5. வருமான வரியை கட்டுவது என்பது எதனைக் குறிக்கின்றது ?

அ) பாரம்பரிய ஆளுமையை

ஆ) பகுத்தறிவு சட்ட ஆளுமையை

இ) சிறப்பியல்புகளை உடைய தலைமை ஆளுமையை

ஈ) இவை அனைத்தும்.

6. 'அரசியல் அறிவியல்' என்ற பதத்தை யார் முதன்முதலில் பயன்படுத்தினார் ?

அ) அரிஸ்டாட்டில் ஆ) பிளாட்டோ

இ) ஜீன்போடின் ஈ) ஆடம் ஸ்மித்.

7. கடந்த 1990 ஆம் ஆண்டுகளில் பன்னாட்டு தேசியக் கழகங்களின் எண்ணிக்கை

அ) 1000 ஆ) 2000

இ) 3000 ஈ) 4000.

8. 'இந்தியக் கலாச்சாரம் மிகவும் பலம் வாய்ந்தது' எனக் கூறியவர் யார் ?

அ) சாமுவேல் ஹன்டிங்டன் ஆ) அமர்த்தியா சென்

இ) காரல் மார்க்ஸ் ஈ) பீட்டர் ட்ரக்கர்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

9. கூட்டாட்சி என்ற வார்த்தை எம்மொழியிலிருந்து பெறப்படுகிறது ?

அ) இலத்தீன் ஆ) பிரெஞ்சு

இ) ஹிந்தி ஈ) சமஸ்கிருதம்.

10. எந்த இந்திய பிரதமரின் காலத்தில் தொங்கும் பாராளுமன்றம் ஏற்பட்டது ?

அ) ஜவஹர்லால் நேரு ஆ) இந்திராகாந்தி

இ) ஐ. கே. குஜ்ரால் ஈ) ராஜீவ்காந்தி.

11. பென்தாம் என்பவர்

அ) நீதிபதி ஆ) அரசியல்வாதி

இ) சமூக சீர்திருத்த அறிஞர் ஈ) ஆசிரியர்.

12. நீதிபதிகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை எந்த ஒரு நாட்டில் முதலில் பின்பற்றப்பட்டது ?

அ) பிரான்ஸ் ஆ) இந்தியா

இ) ஆஸ்திரேலியா ஈ) அமெரிக்கா.

13. இந்தியக் குடியரசுத் தலைவரின் பதவிகாலம்

அ) மூன்று ஆண்டுகள் ஆ) நான்கு ஆண்டுகள்

இ) ஐந்து ஆண்டுகள் ஈ) ஆறு ஆண்டுகள்.

14. உச்சநீதிமன்ற நீதிபதி பதவி வகிப்பதற்கு உச்ச வயது வரம்பு

அ) 62 ஆ) 63

இ) 64 ஈ) 65.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

15. மாநில ஆளுநரை நியமிப்பவர்

அ) முதலமைச்சர் ஆ) ஜனாதிபதி

இ) உயர்நீதிமன்ற நீதிபதி ஈ) பிரதம மந்திரி.

16. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 2001 ஆ) 2002

இ) 2003 ஈ) 2004.

17. மாநகராட்சியின் மேயர், துணைமேயர் ஆகியோரின் பதவி காலம்

அ) மூன்று ஆண்டுகள் ஆ) நான்கு ஆண்டுகள்

இ) ஐந்து ஆண்டுகள் ஈ) ஆறு ஆண்டுகள்.

18. கீழ்க்கண்டவற்றில் எது நகரீயம் ஆகும் ?

அ) பெங்களூர் ஆ) கொல்கத்தா

இ) கோயமுத்தூர் ஈ) நெய்வேலி.

19. உலக மக்கள் தொகையில் இந்தியா வகிக்கும் இடம்

அ) முதலாம் இடம் ஆ) இரண்டாம் இடம்

இ) மூன்றாம் இடம் ஈ) நான்காம் இடம்.

20. மிகக் குறைந்த மக்கள் நெருக்கம் உள்ள மாநிலம்

அ) கேரளா ஆ) ஆந்திர பிரதேசம்

இ) அருணாச்சல பிரதேசம் ஈ) பீஹார்.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 10 × 1 = 1

21. ...................... என்பது சமூகம்என்ற தோரண வாயிலின் முக்கிய 'கல்'.

22. ...................... இறைவனின் பிரதிநிதிகளாக கருதப்பட்டார்கள்.

23. அரசு இயங்குகின்ற தன்மை பற்றி அறியும் இயல் ...................... என்பதாகும்.

24. தனியார் மயமாக்குதல் மற்றும் தாராளமயமாக்குதல் ஆகிய இரண்டும் ...................... ன் இரண்டு ஆணி வேர்களாகும்.

25. ...................... நாட்டின் கூட்டாட்சி முறையில் குழுவாட்சி முறை பின்பற்றப்படுகிறது.

26. அமெரிக்க அரசியலமைப்பின்படி நீதிபதிகள் ...................... உடையவர்களாக இருக்க வேண்டும்.

27. இந்திய அரசியலமைப்பு ...................... ல் நடைமுறைக்கு வந்தது.

28. இந்தியாவில் தற்போது ...................... மாநிலங்கள் மட்டுமே ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றுள்ளன.

29. ...................... மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார்.

30. ...................... இந்திய திட்டமிடலின் தந்தையாக அழைக்கப்படுகிறார்.

III. கீழ்வருவன *சரியா* அல்லது *தவறா* என எழுதுக : 10 × 1 = 10

31. மேற்கத்திய ஐரோப்பாவில் உரோமானிய அரசின் வீழ்ச்சி 'அரசு' என்கிற அமைப்பின் வீழ்ச்சியாகவே கருதப்பட்டது.

32. தந்தைவழி குடும்ப அமைப்பில் தந்தை முக்கியமானவர்.

33. டேவிட் ஈஸ்டன் தன்னுடைய ஆராய்ச்சி கட்டுரைகளில் அரசியல் அறிஞர்கள் ஆழ்ந்த அறிவியல் வழிமுறைகளை பின்பற்ற வேண்டினார்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

34. ஐரோப்பிய யூனியனில் இந்தியா ஒரு உறுப்பு நாடாகும்.

35. அரசாங்கம், அரசின் முக்கியக் கூறுகளில் ஒன்றாகும்.

36. நீதித்துறை மக்களாட்சியின் தூண் என்று கருதப்படுகிறது.

37. மாநிலங்கள் அவை 552-க்கு மிகாத உறுப்பினர்களைக் கொண்டது.

38. தமிழ்நாட்டில் தாலுக்கா அளவிலான நிர்வாகத்தின் தலைவராக தாசில்தார் என்ற வட்டாட்சியர் உள்ளார்.

39. சென்னை மாநகராட்சி 200 கவுன்சிலர்களைப் பெற்றுள்ளது.

40. பொருளாதார மேம்பாட்டின் முதுகெலும்பாக தொழிற்சாலைகள் உள்ளது.

IV. கீழ்வருவனவற்றைப் பொருத்துக: 10 × 1 = 10

| | | | |
|---|---|---|---|
| 41. | குடியாட்சி | அ) | பாரம்பரிய ஆளுமை |
| 42. | மார்கன் | ஆ) | ஹிட்லர் |
| 43. | மாக்ஸ் வீபர் | இ) | மக்கள் இறைமை |
| 44. | கோக்கோ கோலா | ஈ) | தாய்வழிக் கொள்கை |
| 45. | சர்வாதிகாரம் | உ) | பன்னாட்டு தேச கழகம் |
| 46. | நீதி மறு ஆய்வு | ஊ) | அமெரிக்கா |
| 47. | காபினெட் | எ) | உட்டோப்பியா |
| 48. | ஒரு துறையின் நிர்வாகத் தலைவர் | ஏ) | இந்தியா |
| 49. | உள்ளாட்சி அரசாங்கம் | ஐ) | செயலர் |
| 50. | சர் தாமஸ் மூர் | ஒ) | பல்வந்தராய் மேத்தா. |

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



## பகுதி - ஆ

குறிப்பு : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 50 சொற்களில் விடை எழுதுக. 10 × 3 = 30

51. நகர அரசினை வரையறு.

52. அரசின் தோற்றத்தை விளக்கும் கொள்கைகள் யாவை ?

53. ஆளுமை என்பது எத்தனை வகைப்படும் ?

54. நடத்தை இயலை விளக்குக.

55. புதிய அரசியல் அறிவியல் என்றால் என்ன ?

56. உலகமயமாக்குதல் என்றால் என்ன ?

57. செய்தித் தொடர்பு தொழில் நுட்பத்தை விளக்குக.

58. கூட்டாட்சி அரசாங்கத்தின் கூறுகள் யாவை ?

59. இக்கால சர்வாதிகார அரசின் சிறப்பம்சங்கள் யாவை ?

60. நீதி மறு ஆய்வு விளக்குக.

61. அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் யாவை ?

62. தமிழ்நாட்டு அமைச்சரவையின் பணிகளை விளக்குக.

63. உள்ளாட்சி அரசாங்கம் என்றால் என்ன ?

64. இந்திய மக்கள்தொகைக் கொள்கையை விவாதிக்க.

65. நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் பற்றிய விபரம் தருக.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - இ

குறிப்பு : i) எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒருபக்க அளவில் விடையளி. 6 × 10 = 60

66. இன அரசின் வளர்ச்சியை விளக்குக.

67. தெய்வீக தோற்றக் கொள்கையின் கோட்பாடுகள் யவை ?

68. அரசியல் அதிகாரம் என்றால் என்ன ?

69. ஒரவை மற்றும் ஈரவை முறையிலுள்ள வேறுபாடுகளை எழுதுக.

70. நீதித்துறை இருப்பதற்கான தேவை யாது ?

71. இந்தியப் பிரதமரின் பங்கு பணியினை விவரிக்க.

72. தலைமைச் செயலரின் பணிகள் யாவை ?

73. 73, 74-வது அரசியலமைப்பு சட்டதிருத்தப்படி உள்ளாட்சி அரசாங்கத்தின் பொதுவான சிறப்பம்சங்கள் யாவை ?

74. இந்தியாவின் எதிர்காலத் திட்டங்கள் யாவை ?

## பகுதி - ஈ

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடையளி. 3 × 20 = 60

75. மக்கள்நல அரசு குறித்து விரிவான கட்டுரை வரைக.

*அல்லது*

அரசின் பரிணாம வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்த காரணிகள் யாவை ?

76. பாராளுமன்ற அரசு முறையின் சிறப்பம்சங்கள் மற்றும் நிறை, குறைகள் யாவை ?

*அல்லது*

இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் யாவை ?

77. ஆளுநரின் அதிகாரங்களையும், பணிகளையும் விவாதிக்க.

*அல்லது*

கிராம பஞ்சாயத்தின் கட்டாயமான பணிகள் மற்றும் தன் விருப்பப் பணிகள் பற்றி கட்டுரை வரைக.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers